**<u>IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR</u>**

**SC.No. 260/2023**

**Deposition of: PW - 4 (LW -6 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** கலைச்செல்வன் | **Father Name** | **:** |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Age** | **:** |
| **Calling** | **:** | | |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 11.03.2024 at 12.03 p.m to 12.17 p.m.**

எதிரிகள் இருவரும் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>**:**

1) நான் மும்முடி, மணிவிழுந்தான் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணி செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 22.08.2020 அன்று எரிசாராயம் கடத்தல் சம்மந்தமாக எதிரிகளை பிடித்து வைத்து இருப்பதாக காவல் துறையினர் எனக்கு போன் செய்தார்கள். நானும், கிராம நிர்வாக அலுவலரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரியான சந்திரசேகர் என்பவரை அவருடைய ஆம்னி வேனுடன், கேன் மற்றும் சாராயம் இருந்தது. நாங்களும் அதை பார்த்துவிட்டு மகஜரில் கையொப்பம் செய்தோம்.

2) பிறகு அவர் சொன்ன வீட்டிற்கு சென்றோம். அங்கு ஒரு சில்வர் நிற கிரே ஆம்னி காரில் சுமார் 600 பாட்டில்கள் இருந்தது. மேலும் கூரை வீட்டில் காலி பாட்டில்கள், லேபிள்கள், மெஷின், வெள்ளை நிற எரிசாராய கேன், ஆகியவற்றை காவல் துறையினர் கைப்பற்றினார்கள். நானும் உடன் இருந்தேன். நான் கையொப்பம் செய்த 3 மகஜர்களில் உள்ள இரண்டாம் கையொப்பம் தான் அதசாஆ.7 முதல் அதசாஆ **9** ஆகும்.

3) பிறகு ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளிடம் இருந்து பெறப்பட்டது. நான் அதில் கையொப்பம் செய்தேன். அது அதசாஆ.10 ஆகும். அதே போல் இரண்டு பார்வை மகஜர்களிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். அது அதசாஆ**.11** மற்றும் அதசாஆ**.12** ஆகும். காவல் துறையினர் விசாரித்தார்கள்.

**எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை**

4) காவல் துறையினர் எனக்கு போன் செய்தார்கள். நான் அவருக்கு போன் செய்தேன் என்றால் காவல் துறையினர் அதற்கு முன்பு அவருக்கும் போன் செய்துவிட்டார்கள். அப்போது காலை 05.15 மணி இருக்கும். கிராம நிர்வாக அலுவலருக்கு சொந்த ஊர் கோவிந்தம்பாளையம். அவர் அங்கிருந்து சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். காலை 05.30-05.45 க்குள் விஏஓ வந்துவிட்டார். கோவிந்தம்பாளையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதலில் சென்று பார்த்த போது சந்திரசேகர் மட்டும்தான் இருந்தார்.

5) நான் பார்த்தபோது காரில் 10 கேன் எரிசாராயம் இருந்தது. கிராம வங்கிக்கு முன்பு நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. விஏஓ அங்கு கையொப்பம் செய்தாரா என்று தெரியவில்லை. பிறகு வீட்டிற்கு சென்றோம். மேற்படி மூடி, எரிசாராயன், உரைகள் இருந்ததை பார்த்து எழுதினார்கள். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தார்கள். காவல் துறையினர் சாதாரண உடையில் தான் இருந்தார்கள்.மேலும் காவல் துறை சார்பாக ஆவணங்களை எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது. சீருடை இல்லாததால் யார் அந்த போலீஸ்காரர் என்று எனக்கு தெரியாது.

6) எல்லா பொருள்களிலும் காரில் தான் எடுத்துச்சென்றார்கள். 4 காவல் துறையினர் காவல் துறை வாகனத்தில் தான் வந்திருந்தார்கள். காவல் துறையினர் விசாரித்தார்கள். ஆனால் எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. சம்பவதன்றும் அதற்கு மறுநாளும் என்னை விசாரித்தார்கள். நானும், விஏஓ வும் அவை எல்லாம் பார்த்துவிட்டு காவல் நிலையத்தில் சென்று கையெழுத்து செய்தோம். நான் சொன்ன நேரத்தில் , சொன்ன தேதியில் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சான்று பொருள்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் நான் அணைத்து ஆவணங்களிலுமே காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக போடப்பட்ட வழககில் யாரும் சாட்சியம் அளிக்க வராததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Assistant Sessions Judge,**
**Attur.**